1980 ஜூலை 16]

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் கூறியது போல, 1978 ஆம் ஆண்டு டெண்டர் விட்டு, மறு எஸ்டிமேட் கேட்டு, ஆய்வு செய்ய இவ்வளவு காலதாமதம் ஆகி இருக்கிறது. அது அங்கு மாத்திரம் ஏற்படவில்லை. தமிழகத்திலே உள்ள அனைத்துப் பொறியாளர்களும் அப்படித் தான் செய்கிறார்கள். எனவே, அதை மாற்றுகிற வகையிலே அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டு, குறிப்பிட்டு, கோடிட்டுச் சொன்னால், நான் விவரமாகப் பதில் சொல்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை பாப்பனாய்க்கன் பாளையத்திலுள்ள பள்ளிக்கு இருக்கிற நிலை, கோவை ஒப்பனக்கார வீதியிலுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கும் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அந்தக் கட்டடம் இடியும் நிலையிலிருக்கிறது என்பதையும் தெரிவித்து, அந்தக் கட்டடத்தைப் புதுப்பிக்கின்ற திட்டம் ஏதாவது உண்டா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மூலக்கேள்வி சித்தாபுதூர் ஆரம்பப்பள்ளியைப் பொறுத்த அளவில் இருந்தாலும், 3 நாட்களுக்கு முன்பாக நான் கோவைக்கு சென்றிருந்தேன். அந்த நிலையில் அங்கே இருக்கக்கூடிய பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் மோசமாக இருக்கிறது என்று சொன்னவுடனே, அதிகாரிகளைக் கூப்பிட்டு, வேலையைத் துவங்கச் சொல்லியிருக்கிறேன். எனவே, நேற்றைக்கே வேலையைத் துவங்கியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அது உடனடியாக கவனிக்கப்படும்.

மேலக்கோட்டையூர் ஒன்றிய மருத்துவமனை.

* வினா எண் 7 திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவில்லிப்புத்தூர் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியம் மேலக் கோட்டையூரில் உள்ள ஒன்றிய மருத்துவமனையை அரசு எடுத்துக்கொள்ளும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இல்லை.

[1980 ஜூலை 16

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இந்த மேலக்கோட்டையூரில் உள்ள ஒன்றிய மருத்துவ மனைக்கு நல்ல கட்டடங்கள் இருக்கின்றன, டாக்டர்கள் இருக்கிறார்கள் ஆனால் மருந்துகள் இல்லாமல் இருக்கின்றன, அதனால் செயல்படாமல் இருக்கின்றன. அங்கே மருந்துகள் இல்லாத காரணத்தினால் மக்கள் போவது கிடையாது. வாயில்லா ஜீவன்கள்தான் அதை ரெஸ்ட் அவுசாக உபயோகப்படுத்திக்கொண்டிருக்கின்றன. ஒரு ஊராட்சி ஒன்றிய மருத்துவமனை 5 வருடங்களுக்கு மேல் இருக்குமானால், அதை அரசாங்கமே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ஜி. ஒ. இருக்கின்றது. அதன் அடிப்படையில் அரசு அதை எடுத்துக் கொள்ளுவதற்கு முயற்சி எடுக்குமா? மேலும் அங்கே மருந்துகளை கொடுக்க ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, தற்போது திருவில்லிப்புத்தூர் என்ற அந்த இடத்தில் ஒரு தாலூகா மருத்துவமனை—86 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையும், அதுமட்டுமல்லாமல் திருவில்லிப்புத்தூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த ஆர். ரெட்டியார்பட்டியில் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டரும், வத்திராயிருப்பில் 28 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையும் இருக்கின்றன. ஆகவே இந்த பஞ்சாயத்து யூனியன் மருத்துவமனையை அரசு ஏற்றுக் கொள்வதாக இல்லை. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்னமாதிரி அதிலே தவறுகள் இருக்குமானால் சரியான முறையிலே நிர்வாகம் இல்லை என்று சொன்னால் அது கவனிக்கப் படும். மருந்துகள் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். மருந்து கிடைக்கவில்லை என்ற அந்தக் குறைகளை நிச்சயமாக நீக்க அரசு ஏற்பாடு செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

குதிரையாறு அணைத்திட்டம்.

* வினா எண் 8 திரு. என். பழனிவேல் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி வட்டத்திலுள்ள குதிரையாறு அணைதிட்டப் பணிகள் எப்பொழுது முடிக்கப்படும்?

(ஆ) அத்திட்டத்திற்கான செலவு எவ்வளவு?

(இ) அதனால் பயன்பெறும் ரெவின்யூ கிராமங்கள் பழனி வட்டத்தில் எவை? எவை?